செ.வெ.எண்: 72/ஜூன் நாள்:30.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## நியாயவிலைக் கடைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடும்ப அட்டைதாரர்களின் ஆதார் எண் மற்றும் கைபேசி எண்களை பதிவு செய்யும் பணிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், சத்திரக்குடி மற்றும் போகலூர் ஆகிய கிராமங்களில் உள்ள நியாயவிலைக் கடைகளில் இன்று (30.06.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று, நியாயவிலைக் கடைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடும்ப அட்டைதாரர்களின் ஆதார் எண் மற்றும் கைபேசி எண் பதிவு செய்யும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளிலும், குடும்ப அட்டைதாரர்கள் அன்றாடம் பெறும் அத்தியாவசிய பொருட்கள் குறித்த விவரங்களை குறுந்தகவல் (SMS) மூலம் தெரிந்து கொள்ள ஏதுவாக குடும்ப அட்டையில் உள்ள உறுப்பினர்களின் ஆதார் அட்டை எண் மற்றும் கைபேசி எண்களைப் பதிவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் குடும்ப அட்டைதாரர்கள் நியாயவிலைக் கடைகளில் வாங்கும் அத்தியாவசிய பொருட்களுக்கு ரசீது வழங்கியவுடன் அது தொடர்பான தகவல் அவர்களது கைபேசிக்கு SMS மூலம் உடனடியாக அனுப்பப்படும். இன்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சத்திரக்குடி மற்றும் போகலூர் ஆகிய கிராமங்களில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கு நேரடியாகச் சென்று குடும்ப அட்டைதாரர்களின் ஆதார் எண் மற்றும் கைபேசி எண் பதிவு செய்யும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் அத்தியாவசியப் பொருட்கள் சேமிப்பு அறைக்கு நேரடியாகச் சென்று அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு குறித்து ஆய்வு செய்தார். பொதுமக்கள் தேவைக்கேற்ப அத்தியாவசியப் பொருட்களை வழங்கிட வேண்டுமென நியாயவிலைக்கடை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதன்பின்பு, இராமநாதபுரம் மாவட்டம் , சத்திரக்குடி மற்றும் காமன்கோட்டை ஆகிய கிராமங்களில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகளுக்கும், புதுவயல் கிராமத்தில் உள்ள அரசு தொடக்கப்பள்ளிக்கும் நேரடியாகச் சென்று மாணவ, மாணவியர்களின் கல்வி தரம் குறித்து ஆய்வு செய்தார். மேலும் தமிழக அரசின் விலையில்லா பாடநூல்கள் அனைத்தும் வழங்கப்பட்டு விட்டனவா எனவும் மாணவ, மாணவியர்களிடத்தில் கேட்டறிந்தார்.

இவ்வாய்வின் போது மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ராஜசேகரன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.ஜெயக்கண்ணு ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**